எதற்கு? யாரை ஏய்க்க இந்த உத்தரவு?

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர் C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (29—9—49) வெளியூர் (30—9—49) [இதழ் 51

அதிகாரத்தின் பாகுபாடு அறியாத ஆளவந்தார்கள்!

மாகாணத்துக்கே இல்லாத உரிமை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஏது?

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்ற நிலை மாறவேண்டும்

சணல் விலை ஏற்கனவே கூடுதலாக இருந்த காரணத்தால், வெளிநாட்டார் சாமான்களைப் 'பாக்'செய்வதற்கு, சணல் நீங்கிய தாள் போன்ற பொருட்களைப் பயன் படுத்த முயன்றனர். இதன்பலனாக இந்திய சணல் தொழிலுக்குப் பாதகம் ஏற்பட்டது.

இதற்குப் பரிகாரம் தேடும் முறையில், ஸ்தல ஸ்தாபனங்களுக்கு, சென்னை சர்க்கார் ஓர் உத்தரவுபோட்டிருக்கிறது. அதாவது, தங்களுக்குத் தேவையான சிமெண்டு, உணவுதான்யம் முதலியனவற்றை, வெளி நாடுகளில் வாங்கும்பொழுது, கூடுமானவரை அந்தச் சாமான்களை சணல் பையிலேயே பாக் செய்ய ஸ்தல ஸ்தாபனங்கள் நிர்ப்பந்திக்கவேண்டுமென்று, சென்னை சர்க்கார் கட்டளை இடுகிறது.

ஏதோ என் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போய்வருகிறார் என்ற கதைபோல, ஆளவந்தார்கள், தங்களுக்குள்ள அதிகாரத்தின் தன்மை-அளவு ஆகிய எதனையும் சரிவர அறிந்து கொள்ளாமல், ராஜரீகம் செய்து வருகிறார்கள் என்று அறிஞர்கள் கூறும்பொழுது, பதவி கிடைக்காத ஏமாற்றத்தால் பொறாமைகொண்டு, இவ்வாறெல்லாம், ஆளவந்தார்களைப் பழித்துத் திரிகிறார்கள் என்று பேசி, பதில் கூறிவிட்டதாகத் திருப்தி அடைகிறவர்களுக்கு; பிரத்தியக்ஷமாக, இந்த விஷயத்தை அர்ப்பணம் செய்ய ஆசைப்படுகிறோம்.

இன்று மாகாணங்கள், வெறும் கிராமப் பஞ்சாயத்துகள்போல, மாற்றப்பட்டு வருகின்றன - அதன் அதிகாரங்கள் மத்திய சர்க்காரால் பறிக்கப் படுகின்றன—என்பன போன்ற புகார்கள், கிளம்பாத நாளே கிடையாது. பதவி தேடிகள் என்பவர்களால் மட்டும், இந்தக் குற்றப் பத்திரிகை வாசிக்கப்படவில்லை. நிதி அமைச்சர் கோபால் ரெட்டிகாரு முதல் கொண்டு, மூன்று எழுத்து அறிந்த முதலதரமான தியாகி வரையில், வைக்கப்பட்டு வரும் ஒப்பாரியாகும் இது.

தர்மாத்மாக்களின் இராம இராஜ்யத்தில்தான் இந்த அதிகாரத்துவில உரியும் பணி நடக்கிறதென்றால், இப்பொழுது அமுலில் இருந்துவரும் ஏகாதிபத்தியவாதி... அளித்துள்ள ...லும், வெளி ...த்தொடர் ...வும் மாகா ...டாது. ...க்திய ...கப்

நாடுகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் உரிமை இருப்பதென்பது முடியாத காரியம். அம்மாதிரி இருக்கவும் கூடாது. எந்த நாட்டிலும் இதற்கு ஆதாரம் கிடையவும் கிடையாது. இது கேலிக் கூத்தும் ஆகும்.

இன்று ஒரு மாகாணத்து... வேண்டிய, சிமெண்டு—உணவு தான்யங்கள் - முதலியனவற்றை; மத்திய சர்க்காரின்- டில்லியின் மூலமாகத்தான், மாகாண சர்க்கார்கள் பெற்றாகவேண்டும். அதுவும் வெளிநாடுகளுடன் நடைபெறும் கடிதப் போக்குவரத்துகளும், பேச்சுவார்த்தைகளும், சம்பந்தபட்ட டில்லி அதிகாரிகளின் மூலமாகத்தான் நடந்தாக வேண்டும். நேரடியாக மாகாண சர்க்கார் அதிகாரிகள், வெளிநாடுகளுடன் எந்த விதத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது. இன்றுள்ள அரசியல் அமைப்பு முறையின் படி, மாகாணங்கட்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரம் இதுதான்.

மாகாணங்களின் நிலையே- அதிகார வரம்பே- இந்தத் தன்மையில் இருக்கும்பொழுது, ஒரு மாகாண ஆட்சிக்குட்பட்ட ஸ்தலஸ்தாபனங்கள் நேரடியாக வெளிநாடுகளில் சிமெண்டோ- உணவுப் பொருளோ-அவசியமான வேறு எதுவோ—வாங்கும் உரிமை இருக்கிறது என்று எவரும் கூறத் துணியமாட்டார்கள்.

இவைதான், மத்திய- மாகாண- ஸ்தல ஸ்தாபன- அமைப்புகளுக்குள்ள அதிகார வரம்புகள். இந்த நிலையில், மாகாணங்களுக்கே நேரடியாகச் செய்ய உரிமை இல்லாத ஒரு காரியத்தை, அதாவது வெளி நாடுகளில் இருந்து நேரடியாகத் தேவையான சாமான்களை வரவழைக்கும் காரியத்தை, ஸ்தல ஸ்தாபனங்களால் எப்படிச் செய்ய முடியும்? அந்த உரிமை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு எங்கிருந்து கிடைத்துவிட்டது? அப்படி ஏதாவது விசேஷ காரணங்களுக்காகத் தனிச் சலுகை இம்மாகாணத்திலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிறதா? மாகாண சர்க்காருக்கு அறிவிக்காமல் தான், ஸ்தலஸ்தாபனங்களுக்கு அந்த உரிமையை மத்திய சர்க்கார் வழங்கி இருக்கிறதா? எங்கெந்த ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை, சென்னை சர்க்கார் பொது மக்களுக்கு அறிவிக்குமா? இந்த நியாயமான கேள்விகளுக்கு பதில் வேண்டும்!

ஸ்தல ஸ்தாபனங்கள் தங்கள் தேவைகளை வெளியிடும்பொழுது தேவையான பொருட்களை சணல் கோணிகளால்தான் பாக் செய்திருக்க வேண்டுமென்று கண்டிப்பாக எழுதத் தவறக் கூடாது என்பதைக் கவனப் படுத்த, இந்த மாதிரி உத்தரவை, சென்னை சர்க்கார் பிறப்பித்ததா? மாகாண சர்க்காரே, அந்த நிபந்தனையை, கொடுக்கும் ஆர்டர்களில், எழுதிக் கொள்ளக் கூடாதா? மாகாண சர்க்காரின் பேச்சைக் காட்டிலும்; ஸ்தல ஸ்தாபனங்களின் பேச்சுக்குத்தான் மதிப்பளிக்கப்படும்என்ற நிபந்தனை ஏதாவது மத்திய சர்க்காரால் விதிக்கப்பட்டு இருக்கிறதா? விவரம் என்ன? விளக்கம் என்ன? ஆளவந்தார்களின் இந்த விசித்திர சணல் உத்தரவுக்கு? தேவை-தேவை-பதில் தேவை!

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்பது போல், டில்லியால் தங்களுக்குக் கிடைக்கும் சொட்டுச்சொல் தாங்க முடியாமல், அங்கு எதிர்த்துப் பேச அதிகாரம் இல்லாத காரணத்தால், தங்கள் ஆக்கினைக்குக் கட்டுப்பட்ட, ஸ்தல ஸ்தாபனங்களை அச்சுறுத்தி ஆறுதல் பெறலாம் என்ற மனவேதனையின் எதிரொலியா இது? என்னத்தான் இந்த விசித்திர உத்தரவில் மறைந்து கிடக்கிறதோ! நமது சிற்றறிவிற்குப் புலனாக மாட்டேன் என்கிறது! உங்கள் யாருக்காவது தெரிந்திருந்தால் இதற்கு ஒரு சமாதானம்-சிறு விளக்கம்-கூறுங்கள்; அதுவும் உடனே செய்யுங்கள்! நமது நன்றியை வேண்டுமானால், அச்சாரமாக இப்பொழுதே கொடுத்துவிடுகிறோம்!

யாருக்கு அந்த உபதேசம்?

காங்கிரஸ்காரருக்கா - அல்லாதாருக்கா ?

வீட்டுக்குபதேசித்து விபரீதப் பலன் பெற்றதன் விளைவா இது!

விருதுநகர் நகர சபையில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்து நின்றவர்களுட் பலர் வெற்றி பெற்றுவிட்டனர். அதன்பலனாக, முதலமைச்சர், காங்கிரஸ் கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர் முதலியோர் அங்குப் படை யெடுக்கின்றனர். நகர சபை போன்ற நிலையங்களில் கட்சிப் பற்றுக் கூடாதென்கின்றனர்.

முன்னாள் முதலமைச்சர் ஓமாந்தூரார் சென்ற வாரம் அங்குச் சென்ற போது, "கட்சி வேற்றுமைகளை மறந்துவிட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். கட்சியின் பேரால் வெற்றியடைந்திருந்தாலும் அதை மறந்து நகர முன்னேற்றத்திற்கு வேலை செய்ய வேண்டும்" என்று உபதேசம் செய்தார்.

நல்ல உபதேசம். ஆனால், விருதுநகரில் கட்சியின் பேரால் வெற்றி பெற்றவர்கள் காங்கிரஸ்காரர்களே. மற்றவர்கள் தனித் தனி நின்று மக்கள் ஆதரவில் வென்றவர்கள். இவ்வண்ணம் கட்சியின் பேரால் கழுதை நின்றாலும் ஆதரிக்குமாறு கூறியவர்கள் காமராஜரும், மந்திரிகளும், மற்றக்காங்கிரஸ்காரர்களுமே யாவர். இவ்வாறே ஜில்லா போர்டு தேர்தல்களிலும் கட்சியின் பேரால் நின்று வென்றவர்கள் காங்கிரஸ்காரர்களாகவே இருக்கின்றனர்.

அது போதாமல் இப்போது ஜில்லா போர்டுகளின் தலைமைப் பீடங்களையும் காங்கிரஸ்கட்சியினரே கைப்பற்றிவிட வேண்டுமென்று காமராஜர் பெருமுயற்சி எடுத்து ஊர் ஊராகச் சுற்றி வந்தது அனைவரும் அறிந்ததே. தலைமைப் பதவிக்கு காங்கிரஸ்காரர்கள் பலத்த போட்டியிட்டு வென்றதும் வெளிப்படையான செய்தி.

இந் நிலையில் முன்னாள் முதலமைச்சர் யாருக்கு உபதேசம் செய்ய வேண்டும். தம் கட்சித் தலைவர்களுக்கும் கட்சி மந்திரிகளுக்கும் கட்சி அங்கத்தினர்களுக்குமல்லவா இப்படி போதனை செய்திருக்க வேண்டும்! அதைவிட்டுக் கட்சிப் பேரால் நின்று பலர் தோற்றுப் போனவிடத்தில் சென்று கட்சிப் பற்றில்லாமல் வேலை செய்யும் போதனையைக் கூறவானேன்?

ஆம்! தம்மவர்களுக்கும் புத்தி கூறவந்ததின் பலன்தான் முதலமைச்சராயிருந்த ஓமந்தூரார் முன்னாள் முதலமைச்சரானார். வீட்டுக்குள்ளிருக்கும் ஊழல்களைப் பற்றி உபதேசம் செய்தது விபரீதப் பலன் பெற்றிருப்பதால்தான் முன்னாள் முதலமைச்சர் இப்போது வீட்டுக்குபதேசிக்கும் விபரீத வேலையை மறந்துவிட்டு ஊராருக்கு உபதேசம் செய்யக் கிளம்பிவிட்டார் போலும்!

வினை பெரிது—! பயன் சிறிது

"கம்யூனிஸ்டு கட்சியை 'சட்ட விரோதமான ஸ்தாபனம்' என்று அறிவித்தால், கம்யூனிஸ்ட் கட்சி அறவே ஒழிந்துவிடாது. இன்னும் இருந்துகொண்டு தான் இருக்கும். பகிரங்கமாக வேலை செய்தவர்கள் இனிமேல் தலைமறைவாக வேலைசெய்வார்கள். ஆயினும் சில சாதுக்கள் ஏமாந்துபோய் கம்யூனிஸ்ட் வலையில் சிக்காமல் இருப்பதற்கு இந்த நடவடிக்கை சிறிது உதவியாகலாம்."

—தினமணி.

பாம்பின் கால் பாம்பறியும்!

"கம்யூனிஸ்டடுகள் மீது தாங்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையால் தொழிலாளருக்கு நியாயமாக உள்ள உரிமை எதுவும் பறிபோகாமல் சர்க்கார் உஷாராக இருக்க வேண்டியதும் அவசிய மாகும்"

—சு. மி.

மாலை மணி

சென்னை 29—9—49 வியாழக்கிழமை

முன்னேற்றத்தில் மீண்டும் ஒருபடி

குக்கலுக்கு வெறிபிடித்துவிட்டதாகச் சொல்லி, பின்னர் அடித்துப்போடு என்று ஆங்கிலத்தில ஒரு பழமொழியுணடு. அதுபோலவே, நமது சென்னை சர்க்காரும், கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன தொடர்புடைய மற்றத் தொழிற்சங்கங்களையும் சட்டவிரோதமான ஸ்தாபனம் என்று, 1908-வது ஆண்டு கிரிமினல் சட்டத்திருத்த சட்டத்தின 16-வது பிரிவின் துணைகொண்டு தடுத்து விட்டிருக்கிறது.

தீயிடுதல, கொள்ளையடித்தல, கொலை செய்தல், பலாத்காரத்தைப் போதித்தல் போன்ற அக்கிரமச் செயல்களைச் செய்யுமாறு, கம்யூனிஸ்ட் கட்சி, மக்களைத் தூணடி வருவதாகவும் எந்தவகையிலாவது சர்க்காரைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்ற வேணடுமென்று கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துக்கொண்டு இருப்பதாகவும், தனது தவறுனபோக்கைதிருத்திகொள்ளும் என்ற நம்பிக்கையில், பதினெட்டுமாதத் தவணை கொடுத்தும்கூட, கம்யூனிஸ்ட் கட்சி தனது போக்கை மாற்றிகொள்வதாகத் தெரியவில்லை என்றும், எனவே, ஸ்தாபனத்தையே சட்டவிரோதமாக்குவது என்ற முடிவிற்கு வரவேண்டியபதைத் தவிர சர்க்காருக்கு வேறு வழி இல்லாமல் போய்விட்டது என்றும், சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

இலட்சியம் உயர்ந்ததாக மட்டும் இருந்துவிடுவது போதாது; அதனை அடைதற்கு மேற்கொள்ளும் முறைகளும் நேர்மையானதாக இருக்கப பார்த்துக்கொள்ளவேணடும் என்பதில் எவருக்கும் ஆட்சேபனை இருக்க நியாயமிலலை. கொலை, கொள்ளை முதலிய மிருகச்செயலைக் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமல்ல—வேறு எந்தக் கட்சியினர் கையாளுவதும் கண்டிக்கத் தககது என்பதிலும் சந்தேகமிலலை. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, பலாத்கார முறைகளை மேற்கொள்ளுவது நமக்கு உடன்பாடுமல்ல. அகராதியிலுள்ள சக்தி மிக்க சொற்களால், ஐயத்திற்கிடமல்லாமல், பலாத்கார முறைகளைக் கண்டிக்க நாம் என்றும் பின்னடைய மாட்டோம்.

ஆனல், பலாத்காரச்செயல்களைப் பரவவிடாமல், தடுக்கப் போகிறோம் என்று சொல்லுவதாகப்பேசி, அடக்குமுறை ஆயுதங்களை முழுமூச்சாகப் பிரயோகிப்பதை, மக்களாட்சி முறை பாதுகாக்கப்பட வேணடுமென்பதில் உறுதியான நம்பிக்கைக் கொண்டிருப்பவர்கள் ஆதரிக்கமாட்டார்கள்.

கொலை, கொள்ளை முதலிய அக்கிரமங்களைச் செய்ய, மக்களைத் தூணடுவதையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறது கம்யூனிஸ்ட் கட்சி என்று, சர்க்கார குற்றம் சாட்டுகிறது. சர்க்காரின் குற்றச்சாட்டுகளில் எந்த அளவிற்கு உண்மை இருக்கிறதோ நாம் அறியோம். குற்றச்சாட்டுகள் பொதுவாக இருக்கிறதேயன்றி கலங்கரை விளக்கமாக இருக்கவில்லை. அக்கொடுஞ் செயல்களைக் களைய, ஒரு ஸ்தாபனத்தையே சட்டவிரோதமாக்கவேண்டிய அளவிற்கு அடக்குமுறை தேவைப்படுகிறதா என்ற கேள்வி எழுவதும் நியாயமேயாகும். இந்த நியாயமான கேள்விக்கு பதில் தேவை! இந்தக் கேள்வியைக் கிளப்பும் அனைவர் மீதும் சந்தேகப் பார்வையைச் செலுத்துவதோடு மட்டும் ஒரு ஜனநாயக சர்க்காரின் கடமை தீர்ந்துவிடாது.

இந்த மாகாணத்தில் தனிநபர்களின் மிருக சுபாவததால்—பேராசையால் — பழிவாங்கும் பண்பால் — கொலை வினைகள் நிகழுவதில்லைஎன்று கூறி விட முடியாது. அந்த மாதிரி நிகழும் கொலைச் செயல்களை எல்லாம் தடுத்து நிறுத்தப் பலத்த போலீஸ் படையும். சட்டப்புத்தகங்களிலே அதற்கான பல சட்டங்களும், நிரந்தரமாக இருக்கிறபொழுது கம்யூனிஸ்ட்கட்சி தூணடிவிடுவதால் நிகழ்வதாகச் சொல்லப்படும் தீவினைகளைத் தடுக்கவும், கண்டுபிடித்து சாதாரணச் சட்டங்களின் துணைகொண்டு தண்டிக்கவுமான ஜனநாயக முறையை, உதறித்தள்ளி விட்டு, ஒரு ஸ்தாபனத்தையே கலைக்கும் பாசீச முறையை, ஏன் சென்னை சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்னும் ஐயவினவுக்கும், சர்க்கார், தக்க சமாதானம் கூறியாக வேண்டும்.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாட்டில் பொதுஜன ஆதரவு போதிய அளவு இல்லை என்றும் கூறுகிறது சர்க்கார். பொதுமக்களுக்கும் அந்தக் கட்சிக்கும் எந்த அளவு தொடர்பு இருக்கிறது என்பதை, நன்கு ஆராய்ந்து உண்மையைத் தெரிந்துகொண்டிருக்கிற சென்னை சர்க்கார், பொதுமக்களால் சீந்தப்படாத ஒரு சுண்டைக்காய் கட்சியை ஒடுக்க சாதாரண சட்டங்களின் துணையை நாடாமல், கட்சியையே சட்டவிரோதமான ஸ்தாபனம் என்று ஆக்கும் அளவிற்கு அதிதீவிரமான அடக்குமுறைச் சட்டத்தின் துணையை நாடினதில் உள்ள சூட்சமம் என்ன என்பதும் பெரும் புதிராகத்தான் இருக்கிறது. கொசுவைக் கொல்ல கொடுவாள் எடுக்கப் பித்தனும் முன்வரமாட்டானே!

கம்யூனிஸ்ட் கட்சியைசட்ட விரோதமான ஸ்தாபனம் என்று செய்துவிட்டதினலேயே, அந்தக் கட்சி செத்து மடிந்து சாம்பலாகிவிடும் என்று சர்க்கார் கருதிக்கொண்டு இருக்குமானல், உண்மையில் சர்க்கார் ஏமாற்றத்தான் அடையநேரும். கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயர் மக்கள் கவனத்தை விட்டுச் சில நாள் மறையக்கூடும். சர்க்கார் குற்றம் சாட்டுவது போன்ற கம்யூனிஸ்ட் நடவடிக்கைகள், இனி நடைபெறுமல் நின்று விடும் என்று நம்புவதற்கில்லை. அடக்குமுறைகள், கொஞ்ச காலத்திற்குத்தான் மனத்திருப்தியையும் வெற்றி பெற்றுவிட்டதான களிப்பையும், அடக்குமுறைகளை ஏவுகிறவர்களுக்கு அளிக்கக் கூடும். ஆனல், அடக்குமுறைகளைப் பிரயோகிக்கிறவர்கள் பெறுகிற பயனைக் காட்டிலும், அந்த அடக்கு முறைகளுக்கு ஆளாகிறவர்கள் பெறுகிற செல்வாக்கு—பயன்— அளவிலும் தரத்திலும் அதிகமாக இருந்து விடுகிறது. அடக்குமுறைகளின் மறுகக முடியாத இயல்பு இதுதான். அனுபவ உண்மை இது.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு சர்க்கார் கூறுவது போல நாட்டில் இருக்கும் சிறு ஆதரவும் எப்படிக் கிடைததது என்பதில் சர்க்கார் உடனடியாகக் கவனம்செலுத்தியாக வேண்டும். நாட்டில் நிலைத்து இருககும், தொலலை தரும் வறுமை நிலையும், வாழ்க்கை நடத்த இருக்கும் வசதிக்குறைவும், செலவச் சிரமிவும், சர்ககாரின் தவறுன பொருளாதார நடவடிககைகளும், சர்க்காரின் சொல்லுக்கும செயலுக்கும் பொருத்தமில்லாமல் இருக்கிற போக்கும், கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிககு ஆக்கந்தந்து வந்திருக்கின்றன என்பதை. ஆளவந்தார்களால் மறைததோ—மறுத்தோ கூறிவிடமுடியாது. அதிமுக்கியமான இந்தப் பணியை, உடனடியாகமேறகொள்வதைப் புறககணித்து விட்டு, அடககுமுறைகளின் உதவியாலேயே என்றென்றும் ஆளவந்தார்களாகவே இருந்துவிடலாம் என்ற மயக்கத்தையும், ஆளவந்தார்கள் இன்றே உதறித்தள்ளியாக வேணடும், மாறுதல்—முற்போக்கான பாதையில்-அமைதியான முறைகளால் அடையவேண்டுமென்பதையே நாம் இலட்சியமாகக் கொண்டிருப்பதால், இந்த ஆலோசனையை ஆளவந்தார்களுக்கு அறிவிக்கிறேம்.

கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தைச் சட்டப்படி தடுத்துவிட்டாலன்றி, ஆளவந்தார்கள் ஆட்சி ஸ்திரமாக நிலைத்திருக்காது என்ற கோட்பாடு, சர்க்காரின் நடவடிக்கையில் மறைந்திருக்கவில்லை என்று கூறிவிடுவது அவ்வளவு எளிதல்ல.

பொதுஜனப் பாதுகாப்புச் சட்டமும எதிர்பார்த்தபடி பலன் தரவில்லை என்று சர்க்கார் அறிக்கையே, தம் தோல்வியை ஒளிவு மறைவில்லாமல் ஒத்துக்கொள்ளுகிறது.

இது, சர்க்காரின் நிர்வாகத் திறமைக்கு, சர்க்காரே கொடுத்துக்கொள்ளும் நற்சாட்சிப் பததிரமாகும்.

இதனை ஆணித்தரமானக் கணடனம் என்றும்கூட கூறலாம்சர்க்காரின் நிர்வாகம், கீழ்நிலையை அடைந்துவிட்டிருக்கிறதுஎனபதை,தனையும் அறியாமல், சர்க்கார் ஒத்துக்கொள்ளுகிறது. இனியாவது பழுதைத திருத்திக்கொள்ள சர்க்கார் முனையட்டும்.

ஒரு அடக்குமுறை, எதிர்பார்த்த பலனைக் கொடுககத் தவறி விட்ட நிலையில், வேறு வழியை நாடாது, விருப்பத்தை நிறைவேற்ற, மறுபடியும் மற்றோ அடக்கு முறையை உதவிக் கழைப்பது, பொருத்தமானதுதான் என்று ஒருவரும் கூற மாட்டார்கள். தோல்விமேல் தோல்வி, கிடைத்தாலும், திருத்தம் பெறும் மனம் ஆளவந்தார்களுக்கு ஏற்படாது போலும்! மக்களுக்கு வாழ்வளிக்கும் எந்த ஒரு வகையிலும் ஆளவந்தார்கள் முன்னேற்றம் அடையவில்லை யாயினும், அடக்குமுறைகளை அடுத்து அடுத்து வீசுவதில் மட்டும், நாளும் நாளும் முன்னேறிக்கொண்டுதான இருக்கிறார்கள். மேற்கு வங்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு, சென்னை மாகாணத்திலும கம்யூனிஸ்ட் கட்சியை சர்க்கார் தடுத்திருப்பதற்கு, சர்க்காரின் நோக்கப்படி "முன்னேற்றப்பாதையில்" மேலும் ஒரு படியில் சென்னை சர்க்கார் கால்வைத்திருக்கிறது என்றுதான் முடிவு கட்ட வேண்டும்!

படிப்பில் சிறந்தும் பழைய வாசனை போகிறதா?

ரா. சு. சே. சங்க குருபூஜை விழா சென்னையில் நடந்தது. திரு. கே. ஏ. நீலகண்டசாஸ்திரி தலைமை வகித்தார். விழா நடப்பதோ, தோழர் சாஸ்திரி தலைமை வகிப்பதோ வியப்பூட்டுபவை அன்று; தோழர் சாஸ்திரி வரலாற்றுப் பேராசிரியர், விஷயத்தை உணரக் கூடிய மனப்பண்பு பெற்றவர். அவர் கூறுகிறார் ரா. சு. சே. சங்கம் வகுப்புவாத இயக்கமல்லவென்று- வகுப்புவாதத்தை ஒழிக்கப் பாடுபடுவதென்று.

ரா. சு. சே. சங்கம் இந்து மதத்தைக் காத்து இந்துக்களிடை ஒற்றுமையை வளர்க்கத் தோன்றிய தென்றூர் அதைச் சேர்ந்த ஒருவர். இந்து மதம் காக்கப்படுகிறதென்றால், வர்ணச்சிரம தர்மம் காக்கப் படுகிறதென்றுகும். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர குலங்கள் பழையபடி அமையவேண்டுமென்றுகும். இப்படிப்பட்ட மக்கட் பிரிவினை கொண்ட மதம் காக்கப்பட்ட பின் ஒற்றுமைக்கு இடம் ஏது? இடமிருக்குமா மக்களை மந்த மதியினராக்கி, பகுத்தறியும் சக்தி பெறுமல் செய்து வைத்திருக்கும் வரை? அந்தத் திருப்பணியைச் செய்ய ஓர் இயக்கமா தேவை? ஆனல் அதற்கென ஓர் இயக்கம் இருக்கிறது. அது இந்துமதப் பாதுகாப்புப் பிரசாரம் செய்கிறது. அதன் மூலம்மக்கள் பிரிக்கப்பட்டு, வகுப்புவாதம் வளர இடமேற்படுகிறது.

ஆனல் சாஸ்திரி கூறுகிறூர் அது வகுப்புவாத இயக்கமல்லவென்று.

பொதுவாக, இத்தகைய சம்பவங்களைப் பார்க்கும்போதுதான். எவ்வளவு படித்தாலும், வர்ணச்சிரம உற்பத்தியாளர் பரம்பரையினருக்குப் பழைய வாசனை போவதில்லை என்பதை எடுத்துக் காட்ட வேண்டிவருகிறது. அவர்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும முன்னேற்றக் கருத்துப் பெற்றிருந்தாலும, தஙகள் சனதன தர்மத்தை எப்படியாவது மக்கள்மீது திணிகவேண்டுமென்பதைமட்டும் மறப்பதில்லை. அதற்காகப் படிப்பையும் கருத்தையும் மறந்து பேசவும் மயங்குவதில்லை. ஏனெனில் அது தஙகள் சமுதாயத்திற்கே பயன்தரக்கூடியதாக இருப்பதால்.

நாட்டைக் கெடுக்கும் நல்லவர்கள்!

நாட்டின் முன்னேற்றம் கருதிய தேசபக்தர்கள், தியாகிகள், சேவா உணர்ச்சிப் பெருக்குடையோர் ஆகிய "நல்லவர்கள்" ஆட்சி நடைபெறும் இந்நாளில். நாடு முன்னேறுவதற்கு, ஓர் அஙகுல மேனும் நகர்வதற்குக் கூட முடியாமல், பின்னேக்கியே சென்று கொண்டிருக்கிறது.

நாட்டை முன்னேற்றப் பதவிப் பொறுப்பேறறவர்களும் மற்றத் "தியாகிகளும்" அறிந்தோ அறியாமலோ நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராககி வருகின்றனர்.

அண்மையில் காந்தியடிகளின் பேரான தோழர் கனு காந்தி இராஜமகேந்திர புரத்தில் காந்தி உருவப்படக் கண் காட்சியைத் திறந்துவைத்துப்பேசுகையில், விடாமல் நூல் நூற்றல்கட்டாயமாக்கப்பட வேண்டுமென்றும், துணிப் பற்றுக் குறைக்கு அரசாஙகத்தைப் பழிக்கக் கூடாதென்றும நம்மை நாமே பழித்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினர்.

நாடு முன்னேற வேண்டுமென்னும் நலலெண்ணமிருந்தால், நாட்டை முன்னேற்றும சரியான வழிகளை அறிந்திருந்தால், எவரேனும் இந்தக் கற்காலத துணி உறபத்தி முறையை மக்களிடையே போதிக்க முன் வருவாரா?

நாடு உருப்பட வேண்டுமானல் கிராமந்தோறும மின்சாரததைப் பரப்பி, மின்சாரத்தின்மூலம இயஙகும் சிறு இயந்திரஙகளைக் கிராமஙகளெஙகும பகிர்ந்தளித்து, ஜப்பானில் செய்வது போல, பெரிய பெரிய தொழில்களையும சிறு குடிசைக் கைத்தொழில்களைப் போலச் செய்து மக்கள் அனைவரும நலனடையவும், நாடு செழிப்படையவு மன்றே முயலவேண்டும்! ஆனல் இவற்றை விட்டு வீட்டுக்கு வீடு கையால் நூல் நூற்றுக் கொண்டிருந்தால் துணிப்பஞ்சம் போய் விடுமா?

ஆளுவோருக்கு வக்காலத்துப் பெறறு, ஆளுவோரைப் பழிக்க வேண்டாமென்று பிரசாரம் செய்ய வந்த தோழர் கனு காந்தி, நாட்டிற் சேற்ற நல்ல முறைகளைக் கூறுவதைவிட்டு, இந்தக் கோணல் பிரசாரத்தில் இறங்குவானேன்? இந்த "நல்லவர்"களால் நாட்டுக்கு நன்மை எதும் கிடைக்காமற் போனாலும், மக்களை மடையர்களாக்கிவைத்து, நாட்டைக் கற்கால நாகரிகத்திறகு விரட்டும் தீமையாவது ஏற்படாமல் இருக்க வேண்டும்.

யா[illegible]

"ம[illegible]

கா[illegible]

கலைதான் எடுக்கிறோம்-பயிரைப் பாழாக்கமாட்டோம்

பச்சைக் கொடியும்—பச்சைப் பாம்பும் ஒன்றல்ல வேறுவேறே!

'புஷ்பம் சமர்ப்யாமி'யுடன் 'பகூத் அச்சாவும்' வேண்டுமா?

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவைத் தொடக்கவிழாவில் அண்ணாத்துரை சொற்பொழிவு

(ஒரு நிருபர்)

அண்ணாமலை நகர், செப். 21—

இன்று மாலை 6-30 அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பொதுப் பேரவையின் துவக்கு விழா நடைபெற்றது. விழா தொடங்குவதற்கு முன்னால் இசைக் கல்லூரி மாணவர்களால் இன்னிசை விருந்து அளிக்கப்பட்டது.

தமிழ்ப் பொதுப் பேரவையின் பெருந்தலைவர் தோழர் ஜி. சுப்பிரமணியம் தோழர் அண்ணாதுரை, ஆகிய இருவரையும், தோழர்கள் த. மா. திருநாவுக்கரசு மு. அண்ணாமலை ஆகியோர் மேடைக்கு அழைத்து வந்தனர்.

தோழர் சிவசுப்பிரமணியன் குறள் பாட, திருநாவுக்கரசு வரவேற்புரை வழங்க விழாத் தலைவர் தோழர் அண்ணாத்துரையைத் தொடக்க விழாச் சொற்பொழிவாற்ற அழைத்தார்.

தோழர் அண்ணாதுரை பேசியபேச்சின் வருமாறு:—

தலைவர் அவர்களே! தோழர்களே! நாளைக் காலை நான் சென்னையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருப்பதால், இந்த விழா இப்பொழுதே நடத்தப்படுகிறது. தமிழ்ப் பேரவையின் தொடக்க விழா இன்று இந்த ஆண்டு இப்பேரவை செய்யப்போகின்ற காரியங்களைப் பொறுத்துத்தான் இதன் சிறப்பு இருக்கிறது. நான் தமிழைப்பற்றி, அதன் நிலையைப் பற்றியே சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஆண்டவன் சன்னிதானத்தில் மொழிச் சண்டை!

தமிழைப்பற்றிப் பேசுகிற பொழுதெல்லாம், புராணத்துடன் ஒட்டியே புகழ்கிறார்கள். மொழியையும், மதத்தையும் சேர்த்தே பேசுகிறார்கள். பரமசிவன் கையிலிருந்த உடுக்கையிலிருந்து கிளம்பிய ஒரு ஒலி, தென்மொழியாகவும் மற்றொரு ஒலி வடமொழியாகவும் ஆயிற்றாம். வடமொழியைப்பெற்று, பாணினியிடமும், தென்மொழியை அகத்தியனிடமும் கொடுத்துப், பரப்பச் சொன்னாராம். ஆண்டவன் சந்நிதானத்திலேயே இந்த மொழிச்சண்டை ஆரம்பவிழா செய்யப்பட்டுவிட்டது என்று கருதுகின்றேன்! இல்லாவிட்டால் ஆண்டவன் ஒரே மொழியைக்கொடுத்து ஒருவரைவிட்டே வளரச் செய்திருக்கமாட்டாரா? எலும்பு பெண்ணாகிடச்செய்த தமிழ், மறைக்கதவைத்திறந்த தமிழ், சேரன் பேசிய தமிழ், சோழன் கொலு மண்டபத்திலேயே வழங்கிய தமிழ், பாண்டியன் பழகிய தமிழ் என்றெல்லாம் பெருமை பேசுகிறோம். ஆனால் இந்தப் பேரவையில் தமிழின் நிலை என்ன? இன்று அதற்கு எந்த மூலையிலிருந்து எதிர்ப்பு வருகிறது? எப்படி எதிர்ப்பது, எதிர்காலத்தில் அது அளிக்கப்போகும் இடம் என்ன என்பதைப்பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டும்.

தமிழின் நிலை என்ன?

ஆலயத்திற்குச்செல்கிறோம். அங்கு தேவாரமோ, திருவாசகமோ வழங்குவதாக இல்லை. ஆண்டவனுக்கு வடமொழியிலேதான் வணக்கம் செய்யப்படுகிறது. மாதவா, கேசவா, கோவிந்தா என்றால்தான் புரிகிறது. கார்நிற வண்ணனே என்றால் ஆண்டவன் விழிக்கிறார். தமிழும் வடமொழியும் கற்றவர் ஒருவர் இருந்து "ஆண்டவனே அவன் சொல்வது சரிதான்" என்று சொல்ல வேண்டும்! 'தமிழைப் பெற்றுக்கொடுத்த' ஆண்டவன் நிலை இப்படி! திருமண விடுகளுக்கு வரும் புரோகிதர் வாழைப்பழம், மலர்வேண்டும் என்று சொல்லமாட்டார். கதலி புஷ்பம் சமர்ப்யாமி' என்று அவர் சொல்ல, மணமகன் விழிக்க, பிறகு தனது கரங்களால் தொட்டுக்காட்டுவார். வடமொழி அப்படித் தமிழை விரட்டுகிறது; அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ அச்சடிக்கப்பட்டு, நம்முடைய நாட்டிற்குவந்து வீட்டிற்கு ஓடிவரும் ஆங்கில மொழிப் புத்தகங்களைப் பாருங்கள். அவைகளின்அடியில் அறுபது லட்சம் விற்பனை ஆகிவிட்டன, இது பதினெட்டாம் பதிப்பு என்றெல்லாம் போட்டிருக்கும். ஆனால் தமிழகத்தில் தமிழில் இரண்டாயிரம் பிரதிகள் விற்றுவிட்டால், அது செல்வாக்கான புத்தகம் என்று பெயர். கம்பனின் பெருமைகளைச் சேதுப்பிள்ளை எழுதினாலும் சரி, கம்பரசம் என்று கம்பரது குறைபாடுகளை நான் திட்டினாலும் சரி, இரண்டாயிரம் பிரதிகள்தான் விற்க முடியும். நம் நாட்டிலேயே அதிகமாக விற்கக் கூடிய புத்தகங்கள் இரண்டு. ஒன்று தமிழிலே அச்சடிக்கப்பட்ட இரயில்வே கைடு, மற்றொன்று பஞ்சாங்கம்! ஆங்கிலத்தை அந் நாட்டார் அகில உலகமெங்கும் பரப்பி விட்டார்கள். நம் மொழியை நாம் இந்த நிலையில் வைத்திருக்கிறோம். நீதி மன்றங்களிலே அரசாங்கப்பணி மனைகளிலே நம் மொழிக்கு இடமில்லை.

இந்தித் தொல்லை

ஆங்கிலம் அப்படி விரட்டுகிறது. நான் சற்று வெளிப்படையாகவே கூறுகிறேன் இந்த நிலையிலே இந்தி வேறு வந்தால் நம் மொழி என்ன வாகும்? வடமொழி ஒரு புறம் விரட்ட, ஆங்கிலம் மற்றொரு புறம் தாக்க, இந்தி வேறு வந்து விட்டால் நம் மொழி எங்கே ஓடும்? யார் தான் அதற்குக் கதி? இப்பொழுது ஒரு சில ஆங்கில மொழிகளைக் கலவாமல் பேசுவதென்றால் எவ்வளவு கடினமாக இருக்கிறது. இந்தி வந்துவிட்டால் பத்தாண்டுக்குப் பிறகு தமிழ் "பகூத் அச்சா ஹை" என்றல்லவா போய்விடும்? ஆளவந்திருப்பவர்களோ நாம் இந்திக்காரதென்றால், எச்சில் நீர் அருந்திய ஆட்டைப் பார்த்து ஒநாய் கேட்டதைப் போல கேட்கிறார்கள், அவர்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள் என்ற அளவோடு கண்ணியமாக நிறுத்திக் கொள்ளுகிறேன். ஏதடா இவன் இந்தி எதிர்ப்புப் போருக்குப் படை சேர்க்க வந்துள்ளான் போலிருக்கிறது என்று நினைத்து விடாதீர்கள். அதற்கு நான் கல்லூரியினுள்ளே தான் வரவேண்டுமென்ற அவசியமில்லை. வெளியிலிருந்தே அந்த வேலையை வெற்றிகரமாகச் செய்ய முடியும். பிழைப்பு தரும் மொழியொன்று என்று அறிவிக்கப்பட்டால் பிறகு மொழிப்பற்று நிலைக்குமா என்று பேரவையினர் உணர வேண்டும்.

தமிழைப் பூட்டி வைக்காதீர்

தமிழிலே அகம் இருக்கிறது புறம் இருக்கிறது, கலித்தொகை உண்டு குறள் இருக்கிறது என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. தமிழ், அழகப்பச் செட்டியார் வீட்டு இருப்புப் பெட்டியிலுள்ள பணமல்ல! பணத்தை எண்ணிடுபவர் ஒருவர்; கணக்கை எழுதிமுடிப்பவர் ஒருவர், கணக்கை கண்காணிப்பவர் வேறொருவர்; பெட்டியை இழுத்துப் பூட்டுவோர் வேறொருவர்; சாவி வைத்துத் திறப்பவர் ஒருவர்; எடுத்துக் கொடுக்கும் வேலை ஒருவருக்கு; இஷ்டம்போல செலவிடும் வேலைமற்றொருவருக்கு; என்ற நிலைமையைப் போலத் தமிழைப் பூட்டிவைக்கும் தமிழறிஞர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நீங்கள் அறிந்ததை எல்லோருக்கும் தெரியச் செய்யுங்கள், என்பது தான். சிறு சிறு ஏடுகளாக அகத்தைப், புறத்தைத், தொல்காப்பியத்தை எளியவரும் தெரிந்து மகிழுமாறு செய்யுங்கள். ஒரு பாமரனைப் பார்த்துக் கேட்டால் அகம் தெரியாது, புறம் தெரியாது, சங்க இலக்கியங்கள் தெரியாது, என்றாலும் ஆனால், அவனுக்குப் பெரிய எழுத்து அல்லி அரசாணிமாலையும், நல்லதங்காள் கதையும் நன்றாகத் தெரியும். இந்த நிலை மாறவேண்டுமானால், அழகப்பச் செட்டியார் வள்ளலாக மாறிப் பணத்தை வாரி வழங்குவதைப்போல, தமிழறிஞர்கள் செய்யவேண்டும்.

பச்சைக் கொடியும்—பச்சைப் பாம்பும்

தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டது எல்லாம் தமிழ் என்று நான் ஒப்புக்கொள்வதில்லை. பச்சைக் கொடியும் பச்சைப் பாம்பும் பார்வைக்கு ஒன்றுபோலத் தோன்றும் ஜாதியோ, சாதியோ, தமிழிலே கிடையாது என்று தமிழறிஞர்கள் கூறும்போதெல்லாம்நான்பூரித்துப்போவேன். இது போலவே திதி, சிரார்த்தம், திவசம், அமாவாசை கிருத்திகை இவை எல்லாம் தமிழிலில்லை. சீமான் என்றாலும் தமிழென்று ஒப்புக்கொள்ளுவதில்லை. இலட்சுமி என்ற பெயர் தமிழ் எழுத்துக்களால் ஆக்கப்பட்ட சொல் என்பதற்காக, அதை ஒப்புக்கொள்ள முடியுமா? இலட்சுமியை ஒப்புக்கொண்டால் அதோடு ஒட்டிக்கொண்டுள்ள கற்பனை உருவத்தின்மேல் கட்டப்பட்ட கதைகளையும், கதைகளிலே மறைந்துள்ள மதத்தையும், அந்த மதத்திலே மண்டியுள்ள மௌடீக எண்ணங்களையும் நாம் ஒப்புக்கொள்ள முடியுமா? அதனால் தான், தமிழ் நெஞ்சம், தமிழ் எண்ணம், வேண்டுமென்கிறேன். இடையிலே முளைத்த களைகளைக் களைந்து விட வேண்டுமென்கிறேன். நானும் என்னைச்சார்ந்தவர்களும் இந்தப்பணியில்தான் ஈடுபட்டுள்ளோம்.

களைதான் எடுக்கிறோம்

களை எடுக்கிற ஆர்வத்தில் எங்கே பயிரைப் பாழாக்கி விடுவோமோ என்று கழனியைசேர்ந்தவர்கள் அஞ்சுகிறார்கள் அவர்களின்கண்ணியமான அச்சத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். பொறுப் புணர்ச்சியோடு அவர்களுக்கு உறுதி கூறுகிறேன், பயிரை அழிக்க மாட்டோம், அவசரத்தில் கை கால் பட்டு பயிர் அமிழ்ந்து போகுமே தவிர அழிந்து விடாது!

உண்மைக் கருத்துக்கும் மதிப்புக் கொடுப்போம்

இந்த நூல் எனக்குப் பிடிக்காது ஆகவே அதிலே வரும் உண்மைக் கருத்துக்களை ஒப்ப மாட்டேன், என்று சொல்லும் கயவர் பட்டியலிலே என்னைச் சேர்க்க வேண்டாம். சூரியன் ஒளி உள்ளது என்று அக நானூறு சொன்னாலும், அல்லி அரசாணிமாலை சொன்னாலும் உண்மைக் கருத்தை யேற்றுக் கொள்ள வேண்டும்.

சில கருத்துக்கள் மின்மினிப் பூச்சுப் போல் இருக்கும். ஒளியும் அதிகம் தராது; உபத்திரவமும் அதிகம் இருக்காது, நாம் உடனே அதை விரட்டி விடமாட்டோம். அதிக நேரம் இருக்கவும் விடமாட்டோம். அது போல சில கருத்துக்கள் இருக்கும். இப்பொழுது பாடினாரே "அகர முதல எழுத்தெல்லாம்" என்று, அதனால் தொல்லையில்லை, ஆனால் அதுவே ஆடு மயில் வேல முருகா என்று போனால் தான் தவறு.

கோவலன் கண்ணகியை விட்டு நெடு நாள் பிரிந்திருந்தானென்றோ, மாதவியிடம் அடைக்கலம் புகுந்தான் என்றோ, படிப்பதால் தீமையில்லை இந்த கால கண்ணகிகள் கோவலர்களை அவ்வளவு நீண்டநாள் மாதவிகளிடம் விட்டு வைப்பதில்லை! ஆனால் கோவலன் இறக்கப் போவதற்கு முன் அதன் அறிகுறியாக சில பல சகுனங்கள் ஏற்பட்டன என்று படிக்கிற பொழுது தான், தீமை வருகிறது. தோவிற்கு என நெசவுகிற மாணவன்காவிலே கல்லால்இடித்துக் கொண்டால், உடகாரந்து விடுகிறான். அவனைக்கேட்கப்போகிற கேள்வியோ, அலக்சாந்தர் படையெடுப்பு எப்பொழுது, அக்பரின் ஆட்சியில் சிறப்பு என்ன? ருபஸ்காலவாய் எப்பொழுது, ஏன வெட்டப்பட்டது? என்று எல்லாம இருக்கும், அததனைக்கும அருமையாகப்பதிலசொலலும் அவன், கல்லால் இடிததுக்கொண்டால், சகுனத்தடை என்று நம்புகிறான். அதனாலதான அந்தக்களைகளைப், பூங்காவிலே முளைத்துள்ள கள்ளிகளைக் களையவேண்டுமென்கிறேன்.

என்று இன்னும் அரிய கருத்துக்கள் பல கூறித் தம பேச்சை முடித்தார். பின்பு செயலாளர் மு. அண்ணாமலை நன்றி கூற விழா இனிது முடிந்தது. தோழர் அண்ணாதுரை பலகலைக் கழக விருந்தினர் மாளிகையில் தங்கி, உணவு உண்டு, இரவு 10-30 மணிக்குத் தோழர் மதியழகனுடன் சென்னைக்குச் சென்றார். ஏராளமான மாணவத் தோழர்கள் உடன் வந்து வழியனுப்பினர்.

மறுப்பு

சென்னை, செப். 27—

மேற்கு சென்னை திராவிடர் கழகத் தலைவர் தோழர் எ. சே. சாமி அவர்களும், செயலாளர் தோழர் ஆர். டி. அரசு அவர்களும், "விடுதலை"யில் வெளிவந்த செய்தி ஒன்றிற்கு மறுப்பு அறிக்கையாகக் கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளார்கள். அது வருமாறு:—

"26—10—49 (சென்னை) 'விடுதலை'யில் மேற்கு சென்னை திராவிடர் கழகத்தின் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றதாக வெளிவந்திருப்பது அதிகாரப் பூர்வமாகச் செல்லுபடியாகாது. என்னெனில் துணைத்தலைவர் N. S. தங்கரூபன் அவர்களும் பொருளாளர் S. M. குப்புசாமி, மற்றும் இரு செயற்குழு உறுப்பினர், இரு பொது உறுப்பினர் ஆகிய இந்த அறுவரால் ரகசியமாக, இவ்வாண்டு உறுப்பினர் அல்லாத மாஜி உறுப்பினர்களைக் கொண்டு, கீழ்க்கண்ட எங்கள் அனுமதி பெறுமலும் எங்களுக்கு அறிவிக்காமலும், முக்கியமாக அதிகப்படி செயற்குழு உறுப்பினர்களைக் கலக்காமலே கூட்டப்பட்டு இருப்பதேயாகும். உண்மையாதெனில், எத்தனவோ 21-8-49ல் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில் பெரியாரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அப்பொழுது எதிர்த்த இந்த நால்வருந்தான் இந்தத் தகாத காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பதை மேற்கு சென்னை திராவிடர் கழகப் பொது உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, நாளை ஞாயிறு 2-10-49 ல் காலை 9-மணிக்கு சென்னை புரசை பொன்னன் தெரு 6 வது எண்ணுள்ள கட்டிடத்தில் மேற்கு சென்னை திராவிடர் கழகத்தின் அதிகார பூர்வமான இவ்வாண்டு பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் இவ்வாண்டுப் பொது உறுப்பினர்கள் தவறாமல் இதையே அழைப்பாகக் கொண்டுவருமாறு வேண்டுகிறோம்."

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

திருவாரூர்-நகரக்கிளை

திருவாரூர், செப். 25—

25—9—49 மாலை 7 மணிக்கு விசயபுரம் கருணாநிதி மின்னியக்க அச்சக கட்டிடத்தில், திராவிடர் முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் தோழர் தஞ்சைமாலி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க் கண்டவர்கள் அடங்கிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-டாக்டர் இரா. விசயராகவலு; துணைச் செயலாளர்-பி. வாஞ்சிலிங்கம், நிதி உறுப்பினர்-கருணை எம் ஜமால்; விளம்பர உறுப்பினர்-சி. டி. மூர்த்தி. செயற் குழு உறுப்பினர்கள் :— க. நாகப்பன், சே. பெ. சேதுபதி, அ. முகம்மது, ஜுபீர், சு. இராமனுதன், ப சிங்காரம்.

நிர்வாக உறுப்பினரின் எண்ணிக்கையை வேண்டும் போது அதிகப்படுத்திக் கொள்ள கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு, கூட்டம் இரவு 9 மணிக்கு செயலாளர் நன்றி கூற இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் தோழர் சி.டி. மூர்த்தி எழுதுகிறார்.

* * *

திருவல்லிக்கேணி— வட்டக் கிளை

சென்னை, செப். 25—

சென்னை திருவல்லிக்கேணி வட்டம் திராவிடர் கழக உறுப்பினர்களும், அனுதாபிகளும் 25-9-49 ஞாயிறு காலை 9- மணிக்கு திருவல்லிக்கேணி ஹைரோடு 301 எண் கட்டிடத்தில், தோழர் ம. செ. லக்ஷ்மணதாஸ், அவர்கள் தலைமையில் கூடி, திருவல்லிக்கேணி வட்டம் "திராவிட முன்னேற்றக் கழகம்" என அமைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொண்டனர் கூட்டத்தினர். பின் புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- கா. சே. வரதராசன்; பொருள் உறுப்பினர்- நீல. நாராயணன்; விளம்பர உறுப்பினர்- ந. கண்ணபிரான். செயற்குழு உறுப்பினர்கள்- பி. இளஞ்சேரன், எஸ். எ. சீனிவாசன், டி விசுவநாதன், சி. வேலப்பன், விக்கிரமன், இரத்தினசபாபதி, ரெங்கபாஷ்யம், வி. கோவிந்தராஜ்.

"திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா ஆற்றுதல், அங்கத்தினர்கள் சேர்த்தல், கழகத்திற்கென ஒரு கட்டிடம் காணுதல், ஆகியவைபற்றி ஆலோசிக்க 2-10-49 ஞாயிறு காலை 9-மணிக்கு நிர்வாகக் குழு கூட்டத்தைக் கூட்டும்படி செயலாளரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது" என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒ.-கி.)

* * *

தஞ்சை நகரக்-கிளை

தஞ்சை, செப். 25.—

தஞ்சை திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 25-9-49 காலை 10மணிக்குக் கீழ் வாசல்தோழர் பெத்தண்ணன் அவர்கள் அலுமினிய பாக்டரியில்தோழர் எஸ். பெத்தண்ணன் தலைமையில் கூடியது. 123 முக்கியத்தோழர்கள் கூட்டத்திற்கு ஆதரவு காட்டிக்கையொப்பமிட்டனர். மேலும் கூட்ட நடவடிக்கைகளைக் கவனிக்க பல தோழர்கள் வந்திருந்தனர்.

கழக அமைப்பை இனி "தஞ்சை திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயரில் அழைப்பதென தீர்மானிக்கப் பட்டது. கீழ்க்கண்ட படி நிர்வாகக் குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—தோழர். எம். ரம. நடராசன்.

விளம்பர உறுப்பினர்:—தோழர் ஏ. வி. பதி.

நிதி உறுப்பினர்: எஸ். பெத்தண்ணன்.

நிர்வாக உறுப்பினர்கள்:-தோழியர். இராசம் அம்மையார், தோழர்கள் எஸ். இராசகோபால், டி. எஸ். இராமதாஸ். வி. என். ஜி. கருணாநிதி, டி. சே. யூசுப், சே. என். புண்ணிய மூர்த்தி, ஆர். நித்தியானந்தம், எம். எஸ். சமரசபாண்டியன், என். எஸ். வாசன், பி. சாமிநாதன், வி. சக்திரப்பு, டி. சோமு ஓ. சுப்பிரமணியம், எ. சே. வேலன் சே. கோவிந்தராசன், எஸ். எஸ். மணி, என். எஸ். சண்முகவடிவேல், டி. பி. செகனாதன், டி. எஸ். ரங்கராசன், டி. எஸ். பஞ்சாபிகேசன்; எஸ். எல். டி. திருநாவுக்கரசு, வி. கே. கிருட்டிணசாமி. ஆகியோர் ஆவர். திராவிட முன்னேற்றக் கழக எதிர்கால வேலைத்திட்டங்களைக் குறித்து தோழர்கள். எ. சே. வேலன், என். எஸ். சண்முகவடிவேல், எஸ். எஸ. மணி, பி. குப்புசாமி பேசினர். கூட்டம் காலை 11-45க்கு முடிந்தது.

(ஓ. கி.)

திண்டுக்கல்—நகரக் கிளை

திண்டுக்கல், செப். 25—

25-9-49 காலை 10 மணிக்குப் பகுத்தறிவுப் படிப்பகத்தில் கூடிய திராவிட அகத்தினர்கள் ஆதரவாளர் கூட்டத்திற்குத் தோழர் எம். ஆர். மத்திரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவ்வமயம் திராவிடர் கழக நிர்வாகப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டு செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

செயலாளர்— என். முத்து.

நிதி உறுப்பினர்— ம. தங்கவேலர்.

விளம்பர உறுப்பினர்— எம். எம். சின்னப்பா.

நிர்வாக உறுப்பினர்கள்— எ. துரைசாமி, பி. சமதர்மம், எஸ். எம் டி. ராஜா, எம். பரமசிவம், பி. ராஜா, எம். பிச்சை, வி. எம். பிச்சை, எம். எ. கணேசன், கே. முருகையா, டி. எஸ். கந்தசாமி, எஸ். பி. தாண்டவம்.

முன்னேற்றக் கழகத்தின் அனுதாபியாய் இருக்க தோழர் எம். ஆர் மத்திரன் இசைவு தந்தார்.

தோழர் மத்திரனின் பணிக்கு நன்றி செலுத்தி, 16-10-49 ம் நாள் துவக்க விழாவுக்கு, திண்டுக்கல் வட்டத்துக்கு நியமித்துள்ள பிரசாரர்களை வரவழைத்து, அவர்களைக்கொண்டு விழாவை நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(ஒ.-கி.)

சென்னை கிருட்டிணாம்பேட்டை கிளை

சென்னை, செப். 26—

24—9—49 சனிக்கிழமை மாலை 8 மணிக்குக் கிருட்டிணாம்பேட்டை திராவிடர் கழகக் கட்டிடத்தில் உறுப்பினர் கூட்டம் தோழர் திரு. சி. துலுக்காணம் அவர்கள் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 திராவிடர் கழகமென்று இருப்பதை "திராவிட முன்னேற்றக் கழகம்" என்று மாற்றி அமைப்பது.

2 திராவிட முன்னேற்றக் கழகத்தின் தற்காலிகக் கொடியைக் கழகத்தில் ஏற்றுவது.

என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் — மா. ஆதிமூலம்; நிதிஉறுப்பினர் — சு. துலுக்காணம்; விளம்பர உறுப்பினர்— கி. ராகவன்

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:— தோழர்கள் வரதராஜன், இராமமூர்த்தி, சி. கணபதி, சி. துலுக்காணம்.

கூட்டத்தில் பல உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். எனத் தோழர் மா. ஆதிமூலம் எழுதுகிறார்.

* * *

சென்னை புளியந்தோப்பு— கிளை

சென்னை, செப். 26

சென்னை புளியந்தோப்பு திராவிடர் கழகத்தின் உறுப்பினர் கூட்டம் 25-9-49 ஞாயிறு காலை கூடி 18-வது வட்ட திராவிடர் கழகமாக இருந்ததை, திராவிட முன்னேற்றக் கழகம- புளியந்தோப்பு கிளை என்று மாற்றிக்கொள்வது என்று ஏகமனதாக முடிவு செய்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தற்காலிக கொடியை ஆதரித்து அதனை ஏற்றுவிக்க முடிவு செய்தது. திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் புதிய செயற்குழு அமைக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது. எனச் செயலாளர் தோழர் ம. து. நிதியானந்தம் எழுதுகிறார்.

* * *

சேலம் செவ்வாய்ப்பேட்டை -கிளை

சேலம், செப். 26—

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக் கூட்டம் 25-9-49 மாலை 6-மணிக்கு. தோழர் பி. கே. வரதராஜலு அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தோழர் பி. நாராயணசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

கூட்டத்தில் பதினைந்து பேர் கொண்ட செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:— பி. கே. வரதராஜலு. துணைச் செயலாளர்கள்:— கே. கே. மாதவன், கே. எஸ். நஞ்சப்பன். பொருள் உறுப்பினர்:— ஆர். நாராயணசாமி. தோழர் எ. சித்தையன் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் எ. சித்தையன் அறிவிக்கிறார்.

* * *

பொள்ளாச்சி—கிளை

பொள்ளாச்சி, செப். 26—

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 25—9—49 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்குத் தோழர் கு. ந. கிருட்டிணசாமி அவர்கள் தென்னந் தோப்பில், திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு உறுப்பினர் தோழர் பு. நடராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்டவாறு செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—கு. ந. கிருட்டிணசாமி; நிதி உறுப்பினர்:—பொ. வ, புரட்சிமணி; விளம்பர உறுப்பினர்:- இரா. பாண்டியன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—பு. நடராசு, செ. சு. கந்தசாமி. எ. கே. கோவிந்தன், கோ. கோபால், ஜெ. சுந்தராசன், அ. ச. பாலசுப்பிரமணியன், ஆர். எஸ். மாரியப்பன், ந. மாட்சி, தி. முருகேசன், ச. கந்தசாமி.

என விளம்பர உறுப்பினர் தோழர் இரா. பாண்டியன் எழுதுகிறார்.

* * *

திருத்துறைப்பூண்டி—கிளை

திருத்துறைப்பூண்டி, செப். 26—

25—9—49 ஞாயிறு காலை 10 மணிக்குத் தோழர் பி. கோபால் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத் திருத்துறைப் பூண்டி-கிளை அமைப்புக் கூட்டம் பழைய ஆனந்த லாட்ஜ் கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்குக் கழகத் தோழர்கள் பலரும் வந்திருந்தனர். புதிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

செயலாளர்:—வ. சுப்பிரமணியன்; பொருள் உறுப்பினர்:—எம். கே. ஹாஜாமீர்; விளம்பர உறுப்பினர்:—இரா. காத்தையன்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்:- குப்புசாமி, இருதயசாமி, ரெத்தினம், வேம்பையன், கோபால், எம். பி. தெட்சணாமூர்த்தி. மற்றும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின் கூடலுடன் கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் தோழர் இரா காத்தையன் எழுதுகிறார்.

* * *

மன்னார்குடி—கிளை

மன்னார்குடி, செப். 26—

மன்னார்குடி திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம் 25-9-49 ஞாயிறு மாலை 6 மணிக்குத் தோழர் ப. நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

1 சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் குழுவினர் செய்த தீர்மானங்களை முழுமனதுடன் ஆதரிக்கிறது.

2 செயற்குழுவினர் தேர்தல் கீழ்க்கண்டபடி நடைபெற்றது.

செயலாளர்—சோன்

துணைசெயலாளர்—இரா. சீதக்காதி. நிதி உறுப்பினர்—ந. பழனிவேல்

விளம்பர உறுப்பினர்—பொ. இலக்குவன்

23—10—49க்குள் திராவிட முன்னேற்றக்கழகத் துவக்க விழாவினை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. எனச் செயலாளர் தோழர் சோன் எழுதுகிறார்.

* * *

முத்துப்பேட்டை—கிளை

முத்துப்பேட்டை, செப் 26—

25-9-49 அன்றுகாலை 10மணிக்குத் தோழர் அரு. மு. சோமசுந்தரம் இல்லத்தில், தோழர் அரு. மு. கணபதி அவர்கள் தலைமையில் "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைக்கப்பட்டது. புதிய செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—அரு. மு. கணபதி துணைச்செயலாளர்: — கி. இராசு பொருள் உறுப்பினர்:— வ. இராமனுதன். விளம்பர உறுப்பினர்:—ந. தருமலிங்கம்

ஏனைய செயற்குழு உறுப்பினர்- டாக்டர். சிவசங்கரன். பி. காலசாமி ப. நாகரெத்தினம், இரா நடராசன் வீ. சற்குணம், பொ. செகனுதன், ஷே. இபுராகிம்

மற்றும் இவ்வூர் விக்டோரியா பஜாரில் தோழர் பி. கலாசாமி கடைக்கருகில் தோழர் டாக்டர் சிவசங்கரன் அவர்களால் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. புகைப்படமும் எடுக்கப்பட்டது. எனச் செயலாளர் தோழர் அரு. மு. கணபதி அவர்கள் அறிவிக்கிறார்.

* * *

கூலூர்—கிளை

கூலூர், செப். 26—

25-9-49 ஞாயிறு இரவு 9-30 மணிக்குமணிமார்க்குபீடிகடையில், தோழர் எஸ். எ. மாணிக்கம் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது புதிய செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:—எஸ். கே. சண்முகசுந்தரம்; பொருள் உறுப்பினர்:—எஸ். என். அற்புதசாமி; விளம்பர உறுப்பினர்:— எஸ். எ. நாச்சிமுத்து

ஏனைய செயற்குழு உறுப்பினர்:- எம். ஆர். நாச்சிமுத்து, ஆர். எஸ். மணியம, என். எ. மாணிக்கம், எஸ். ஆர். ரங்கசாமி, எஸ். பி. முத்துசாமி.

என விளம்பர உறுப்பினர் தோழர் எஸ். எ. நாச்சிமுத்து எழுதுகிறார்.

ஏஜெண்டுகளுக்கு

அதிகப்படி பிரதிகள் தேவைப்படும் ஏஜெண்டுகள் முன் பணம் அனுப்பினாலன்றி கவனிக்கப்படமாட்டாது.

—"நிர்வாகி"

இனி நடப்பவை

விருத்தாச்சலம்-தெ. ஆ. மாவட்டக் கழக எதிர்கால வேலைத் திட்ட அமைப்புக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று 2—10—49 ஞாயிறு மாலை 3 மணிக்கு ஜெயில் தெரு, எண் 11. (பெரியார் இல்லம்) தோழர் சி. முனுசாமி அவர்கள் இல்லத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

எதிர்காலத்தைப்பற்றி நல்ல மதாரு முடிவுக்குவர அக்கூட்டத்திற்கு வந்து தோழர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கோரப்படுகிறார்கள். பொருள்— திராவிட முன்னேற்றக் கழகம், இதர விஷயம.

* * *

சென்னை:—எழும்பூர் வள்ளுவர் மன்றத்தின் பயிற்சிக் கூட்டம் 2-10-49 ஞாயிறு காலை 10 மணிக்கு மன்றக் கட்டிடத்தில், தோழர் ஜி. பி. சங்கரன் தலைமையில் நடைபெறும். அதுகாலை மன்ற உறுப்பினர்கள் "மக்களும நாகரிகமும" என்பது பற்றி சொற்பொழிவாற்றுவர்.

* * *

ஸ்ரீவில்லிபுத்தூர் :—9—10—49 ஞாயிறு மாலை 5-மணிக்கு இவ்வூர் மடத்துப் பட்டித் தெருவில் உள்ள நெசவுத் தொழிலாளர் சங்கக் கட்டிடத்தில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். திராவிடர்கழகத்திலிருந்து விலகிய தோழர்களும் புதிதாக உறுப்பினராகச் சேர விரும்பும் தோழர்களும் திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளரைச் சந்தித்து தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். மேற்படி கூட்டத்திற்கு எல்லாத் திராவிடத் தோழர்களும அழைக்கப்படுகிறார்கள்.

* * *

மைலாப்பூர் (சென்னை)—திராவிட முன்னேற்றக் கழகத்தின மயிலாப்பூர் கிளை ஒன்று அமைக்க ஆலோசனைக்கூட்டம மயிலை அரங்கநாதபுரம் 10 எண் [illegible] இல்லத்தின மாடியில 1 [illegible] 49 இரவு 8 மணிக்கு நடை[illegible] வதயே அழைப்பாக எற்று [illegible] மயிலைத் திராவிடத்தோழர்களும வருகை தர வேண்டப்படுகின்றனா என பொன் கு. கோதண்டபாணி தெரிவிக்கிறார்.

* * *

செல்லிகுப்பம்—இந்நகர் மெயின் ரோடில் தோழர் சிவாநந்தம் அவர்கள் கட்டிடத்தின் மேல் மாடியில் 2-10-49 காலை 9-மணிக்கு ஓர் அமைப்புக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், கழக எதிர்காலத் திட்டங்கள் பற்றியும். திராவிட முன்னேற்றக் கழக அமைப்பு பற்றியும், மற்றும் சில முக்கியமானவை குறித்தும் ஆலோசிக்கப்படும். கழக நிர்வாக உறுப்பினர்களும, அங்கத்தினர்களும தவறாது வரும்படி அழைக்கப்படுகிறார்கள.

* * *

திருப்பூர்—2-10-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு 20 வது வார்டு, 8/20 எண்ணுள்ள பாலராஜ் இலலத்தில் கூட்டம நடைபெறும். பல தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கவேண்டும எனக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதையே அழைப்பாகக்கொண்டு திருப்பூர் பகுதி நகரத்தோழர்கள் வரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள.

* * *

சுண்டக்காமுத்தூர்—இவ்வூர் அண்ணாத்துரை வாலிபர் சங்கத்தின் கூட்டம் ஒன்று தோழர் சு. ா. ராமசாமி அவர்களது தோட்ட வீடுதியில் 30-9-49 இரவு சுமார் 8-30-மணிக்கு கூடும். அதுபோது கழகத்தின் பெயர் மாற்றம் பற்றியும், மற்றுமுள்ள பிரச்சினைகள பற்றியும் விவாதித்து முடிவு செய்யவேண்டியிருப்பதால், சங்க உறுப்பினர்கள் அனைவரும், (அனுதாபிகளும்) அழைக்கப்படுகிறார்கள

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.